[illegible]

ப்ரஹ்மவித்யா.

பத்திர கிரயம்
1வருஷ 2—12—0
6மீ 1—8—0
3மீ 0—14—0
1காபி- 0—2—6
இலங்கைக்கு 3—8—0

ப்ரம்மவித்தியா பத்திரிகை

BRAHMAVIDYAPATHRIKA.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

பத்திரிகை கிரயத்தை முன்பாகவே அனுப்பவேண்டும். மணியார்டராக வரவேண்டுமாயின் ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் ஸேவிங்ஸ்வாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

ரு-மபுத்தகம்] சிதம்பரம்:— [illegible] [இலக்கம்- உ௰

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நம் ப்ரம்மவித்தையின் நான்காவது வருஷாரம்பம்.

ஆரியசகோதரர்களே !

இவ்விந்துதேசமானது முற்காலத்தில் கல்வி, செல்வம், நாகரீகம், வாய்மை, ஒழுக்கம், அன்பு, ஆசாரம், ஜீவகாருண்ணியம், தவம், தானம், தருமம், குலம், குணம், ஞானம்முதலாகிய மாந்தர்க்குரிய பெரும்பேறுகள் பலவும் குறைவின்றி உடையராய யாவராலும் துதி செய்யப்பெற்ற பெரும்புகழ்வாய்ந்த மேலோர் வாழும் உத்தம தேசமாயிருந்தும், அன்னிய தேசத்தார் செய்த பல அக்கிரமச்சூழலில் அலக்கணுற்று நாளடைவில் மிக ஈனதிசையை அடைந்துவிட்டதென்பதை அறியாதார் ஒருவருமிலர். நம்மவர்கள் தமக்குரிய மற்றெல்லாவற்றையும் இழந்தது பெரிதன்றாயினும் தம் உடலுயிர் இரண்டற்கும் உற்ற பெருந்துணையாய் நின்ற நமது வைதிகசமயத்தையும், ஆரியசாதியாசாரங்களையும் கைநழுவவிட்டுச் சிறுமையடைந்ததும், அவருள்ளே சிலர் மிலேச்சசமயம், அநாரியாசாரம் தழுவி அறிவிழந்து இழுக்குற்றதுமாகிய இன்னோரன்ன செயல்களை நினைக்குந்தோறும் மிகுந்த துயரத்துக்கிடனாகின்றது. ஆயினும் தெய்வாநுகூலத்தால் தற்காலத்தில் தேசாபிமான மதாபிமானிகளாகிய பரோபகார சீலர்கள் பலர் அங்கங்கே தோன்றிச் செய்துவருகின்ற நன்முயற்சிகளினால் நம்தேசமும் மத ஜாதி ஆசாரங்களும் தழைத்தோங்குவனவாக, நம்மவர் சுகம்பெற வாய்த்த நற்செயல்கள் யார்க்கும் சந்தோஷத்தைத் தாராதொழியாது.

நாம் மேற்கூறிய யாவற்றையும் மனத்தில் சிந்தித்து இத்தருணத்தில நாம் சும்மாவிருப்பது சரியன்றென்று கருதி இப் "ப்ரம்மவித்தை" என்னும் பத்திரிகையைப் பிரசுரிக்கத்துணிந்து ஸம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளிலும் வைதிக லௌகிக இருதிறத்தார்க்கும் எளிதில் உபயோகமாகும்படி அநேக விஷயங்களை எழுதிக் கிரமமாக நடத்திவருகின்றோம். நாம் இப்பத்திரிகை பிரசுரிக்கத் தொடங்கி மூன்றுவருஷங்கள் ஆயின. பத்திரிகை தொடங்கியதுமுதல் அநேக அருமையான விஷயங்களை எழுதிவந்திருக்கின்றோம். முதல்வருஷத்திலே தொடங்கி இதுகாறும் "சமஸ்கிருதபாஷை" என்னும் தலைப்பின்கீழ் சமஸ்கிருதபாஷையின் வரலாற்றையும், அதன் மேன்மையையும், அப்பாஷையின்கண்ணே சிறந்து விளங்கும் வேதம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம், இராமாயணம், வியாகரணம்முதலிய நூல்களைப்பற்றியும் மிகவிரிவாகப்பேசினோம். இன்னும் அத்தலைப்பின்கீழ் வியாகரணமொழிந்த ஏனைய வேதாங்கங்களையும் பிறவற்றையும் குறித்து நீள எழுதிவருவோம். இதுவன்றி அம்முதற்புத்தகத்தில் மதம், அதன் ஆசிரியர்கள் அதன் பிரயோசனம் என்பவைகளைப்பற்றியும் மிகவிரிவாகப் பேசியிருக்கின்றோம். அதுவன்றி "ஆன்மாவும் சரீரமும்" என்னும் விஷயத்தைக் குறித்துச், சென்னைமாநகரிலே நெடுங்காலமாக வைதிகசித்தாந்தத்தை நிந்தித்தும் ஆரியர் பலர் அறிவைக்கெடுத்தும் பல வித்துவான்கள் நியாயதண்டங்களை அலக்ஷியம் செய்து தலைநிமிர்ந்துலாவிய தத்துவவிவேசினியார் கூறிய போலிக்கூற்றை, நியாயாஸ்திர நெடும்படையால் அடியற்று முடிசாயச்செய்து, அதன் உண்மைக் கருத்தை ஆரியர் பலர்க்கும் வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதிற் காட்டிய விஷயம் அறிஞர்சிகாமணிகள் அறிந்ததொன்றேயாம். இவையன்றி இடையிடையே பற்பல விஷயங்களும் எழுதப்பட்டுள்ளன.

இரண்டாம் வருஷத்தில் முதல்வருஷத்திலிருந்துதொடர்ந்துவந்தவற்றோடு நம்மவரும் மடத்தாரும், நம்மவர்க்கு ஆவசியகம் வேண்டியது யாது?, ஸ்ரீஹர்ஷகவி சரித்திரம், கதசர்களுக்கு ஓர் அறிவுறுத்தல், மடாதிபதிகளுக்கு ஓர் விண்ணப்பம், சுதேசசர்வகலாசாலை, ஞானாமிர்தம், ஆரியர்களுக்கு ஓர் விண்ணப்பம் ஆகிய இவைகளையும் இன்னும் பல விஷயங்களையும் குறித்துப் பலவாறு எழுதியுள்ளோம்.

மூன்றும் வருஷமாகிய சென்ற வருஷத்தில் முற்றொடர்புகளோடு, மறுபிறப்பு, கடவுள், விக்கிரக ஆராதனை, பிருகுவமிசம் ஆகிய இவைகளைப்பற்றி மிக அருமையாகிய சித்தாந்த உண்மைகளெல்லாம் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் "மறுபிறப்பு" என்னும் விஷயம் நாத்திகர் கிறிஸ்தவர் முதலாகிய பாஹ்யமதத்தவர் கூறும் மருண்மொழிகளைக் களைந்து வைதிகசமய சித்தாந்த முறைப்படி நாட்டப்பட்டது. கடவுள் விஷயமும் அங்ஙனமே புறச்சமயிகள் அறியாமையினால் கூறும் போலி நியாயங்களை வேரறக்களைந்து ஒப்பற்ற ஓர் பரம்பொருள் எம்மை ஆளுடையானென்பதை நியாயவாயிலாக நிலைநிறுத்தப்பட்டது. விக்கிரக ஆராதன விஷயமோ முதலில ஆரியசமாஜத்தார் வினாக்களுக்கு விடையாயெழுந்து நாஸ்திகர், கிறிஸதவர், பிர்மசமாஜியர் முதலாகிய போலிச்சித்தாந்திகள் அஞ்ஞானகாரணமாகப் பேசும் வீண் மொழிகளைக் கண்டித்து, நம் வைதிகசித்தாந்த மெய்தருகொள்கைச் செவ்விய மறைநூல் உள்ளக்கிடக்கையை யாவரும் மையல் நீங்கித் தெளிந்துய்ய எழுந்ததென்பது சொல்லாதே போதரும். இவ்விஷயத்தையும் எவ்வித வாதிகளேனும் அணுத்துணையாயினும் அசைத்திட்டாரல்லர். இதுவும் சென்ற வருஷத்தோடு நில்லாது மேலே நான்காம் வருஷமாகிய இவ்வருஷத்தும் தொடர்ச்சிபெறும். இவையன்றி வேறு பல விஷயங்களும் இடையிடையே எழுதப்பட்டிருக்கின்றன.

இப்பத்திரிகையாகிய ஞானபானு எழுந்து பிரகாசித்த அன்றே அஞ்ஞானவிருள் குடிகொண்ட நாத்திக பொக்கிஷமாகிய "தத்துவவிவேசினி"யார் தன்வாழ்வு துறந்தொழிந்த சங்கதி நம பத்திரிகாபிமானிகளுக்கும் பிறர்க்கும் நன்கு தெரிந்திருக்கலாம். நம் ப்ரம்மவித்தை அம்மட்டில் நில்லாது நம் தேசத்தில் இன்னும் பற்பல நன்மைகளுக்கும் காரணமாய் நின்று பல வேலைகள் செய்துவருகின்றதென்பதும் யாவருமறிவார்கள்.

இவ்வளவு சுபசரீரியாய் எழுந்துலாவிவரும் நமது ப்ரம்மவித்தைக்கு இப்பொழுது மூன்று வயசு பூர்த்தியாகி நான்காம் வருஷம் தொடங்கியிருக்கின்றமையால், சென்ற வருஷங்களில் யாதொரு இடையூறுமின்றிக் காப்பாற்றி நல்வாழ்வளித்த பரங்கருணைத்தடங்கடலாகிய பரமேசுரன் மேலும் அங்ஙனமே காப்பாற்றி யருள்புரிவானென்று அவரது திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

நம் வைதிக சமயாபிமானிகளாகிய ஆரியசகோதரர்களும் நாம் கொண்ட இந்நன்முயற்சியைத் தளரவிடாது மென்மேலும் வளர்த்தற்கு வேண்டிய உதவிபுரிந்து தாமும் எம்போல் மிக்க அபிமானிகளாய்ப் பற்பல முயற்சிகள் செய்துவந்ததற்காக அவர்களுக்கு அநேக வந்தனம் அளிப்பதோடு மேலும் இடையறா முயற்சியுடையர்களாய்த் தம்வாழ்வை நல்விஷயத்திற் செலுத்திப் பரமபதியினது திருவருள் புரியுமாறு வேண்டுகின்றோம். சுபம். சுபம்.

கடிதம்.

—:o:—

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்களுக்குப் பத்திரிகாசிரியனாச்சாரமாட்டா.

திரியேகத்துவாபாசம்.

இந்தியாவிலுள்ள இந்துக்கள் அஞ்ஞானிகளென்றும், அவர்களுடைய அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத்தந்து மோக்ஷத்துக்கு வழி காட்டுகின்றோமென்றும் சொல்லும் கிறிஸ்து குருமார், தங்கள் மதத்தில் கடவுள் ஒன்றென்றும் இந்துக்கள் மதத்தில் கடவுள் பலவென்றும் (?) சொல்லுவது பிரத்தியக்ஷமாதலால் அப்படிப்பட்ட கிறிஸ்துமதத்தில் கடவுள் எத்தனையென்று விசாரிப்பான்வேண்டி எழுதத்துணிந்தாம்.

கிறிஸ்துமதத்தில் பிதா, குமாரன், ஆவியிம்மூன்றையுஞ் சொல்லிப், பின்னும் ஒன்றென்றுமுரைக்கின்றார்கள். அது எவ்வாறென வாராயவேண்டித் தொடக்கத்தில் பிதா, குமாரன் இவ்விருவரும் ஒன்றென்பதெங்ஙன மியையுமென யோசிப்பாம். இவ்விருவரும் ஒன்றென்றியம்புதற்குத் தக்க வாதாரமேற்படுமாயின் இதுகொண்டு மூன்றுமொன்றென்றொத்துக் கொள்ளலாம்.

பிதா, குமாரன் இவ்விருவரும் ஒன்றென்பதற்கு நியாயம் வேண்டும். இரண்டு பொருள் இரண்டாகுமேயன்றி யொன்றுவது ஒருபோதுமியையாது? இரண்டு எலுமிச்சங்கனியை யொன்றாகுவது சாத்தியமாகுமா? இது கணிதசாத்திரத்திற்கு முற்றும் விரோதமன்றோ? இரண்டு எலுமிச்சங்கனியை ஒன்றாக்க இசையுமாயின் ஒரு கனியையும் இரண்டாக்கலாம் ஒரு கனி இரண்டாக்குவதுண்டேல் இரண்டை நாலாகவும், நாலை நாற்பதாகவும், நாற்பதை நூறாகவும், இவ்வாறு அளவிறந்த கோடிகளாகவும் ஆக்கலாம். இவ்வாறு செய்யக்கூடுமானால் ஒரு சவரனைப் பல கோடிகளாகவும், ஒரு புத்திரனைப் பல புத்திரர்களாகவும், ஒரு வீட்டைப் பல வீடுகளாகவும், ஒரு தேசத்தைப் பல தேசங்களாகவும் செய்யலாம். இதனால் தரித்திரமென்பதில்லாமலேபோம். இது கூடும்பக்ஷத்தில் க்ஷாமகாலத்தில் அரிசிமூட்டை ஒன்றனைப் பல்லாயிர மூட்டைகளாக்கிவிடலாம். பிறகு எல்லோரும் தனவந்தர்களாகவும், பசியில்லாமல் திருப்தியாய்ச் சாப்பிடுகிறவர்களாகவும் இருப்பார்கள். இவ்வாறுவது கூடாமையால் அது ஒப்பத்தக்கதன்றேயாம். இனி வேறு உவமானங்கொண்டு பார்ப்போம்.

ஒரு மண் உருண்டையை யெடுத்து இரண்டாக்குவது போலவும், அவ்விரண்டை மீண்டும் ஒன்றாக்குவதுபோலவும் யேகோவா என்னும் பைபில் கடவுள் தாம் ஒன்றாகவும், ஏசுக்கிறிஸ்துவோடு இரண்டாகவுமாகி, பின்பு ஒன்றாகின்றாரொன்று சொல்லுகின்றாமெனின் இது இன்னும் பெரும் அனர்த்தத்திற்கு இடந்தருகின்றது. எங்ஙனமெனின், ஒரு வஸ்து இரண்டாகப்பிரிவதும், அவ்விரண்டு ஒன்றுவதும் கண்டப்பொருளில் கூடுமேயன்றிப் பரிபூரணப்பொருளில் அமையாது என்பதாம். ஜலம் நிறைந்து மேல்மூடியிட்ட புட்டியில் ஜலம் இரண்டாகிப் பின் ஒன்றாகுமா? ஏன் ஆகாது? அப்புட்டிக்குள் ஜலம் நிறைந்திருப்பதால் இரண்டாவதற்கு இடமில்லை; இடமில்லாமையால் ஜலம் பிரியாது; பிரியாதாகவே இரண்டாகாது; இரண்டு ஆகாதாகவே மீண்டும் ஒன்றுவதென்பதுங் கூடாது. அவ்வாறே கடவுள் பரிபூரணராயிருத்தலாலும், அவரில்லாத இடமில்லையென்று கிறிஸ்தவர் கூறுவதனாலும், யேகோவாவென்னும் பிதாவான கடவுள், ஏசுக்கிறிஸ்து என்னுங் குமாரனாகி இரண்டுபட்டு மீண்டும் ஒன்றாகின்றாரென்று சொல்வது ஆக்ஷேபத்திற்கிடனாகின்றது. இனி மற்றொரு விதத்தால் ஆலோசிப்பாம்.

பாலே தயிராவதுபோல் பிதாவே குமாரராயிருக்கின்றார் இதில் பூர்ணத்துவ தோஷம் இல்லை; ஓர் பொருள் இரண்டாயிருக்கின்றது என்னில் இது காரணம் கெட்டுக் காரியமாகும் பரிணாம (திரிபு) வாதம். பாலே தயிராவதில் பால்கெட்டுத் தயிராகின்றது. இவ்வாறே பிதா கெட்டுக் குமாரனாகவேண்டும். இப்படிச்சொன்னால் பிதா பரமண்டலத்திலும், குமாரன் (கிறிஸ்து) பூமியிலும் இருந்தாரென்பது அபத்தமாகின்றது; அன்றி இப்போது பரமண்டலத்தில் பிதாவின் வலது பாகத்தில் குமாரன் (கிறிஸ்து) இருக்கிறாரென்பதும் அபத்தமாகின்றது. பாலே தயிரென்பதில் பால் ஒரு இடமும், தயிர் ஒரு இடமும் இருக்கின்றனவன்று. அவ்வாறே பிதா ஒரு இடமும் குமாரன் ஒரு இடமும் இல்லாமல் ஓரிடத்தில் இருவரும் இருந்தால் பால் தயிர் திருஷ்டாந்தம் பொருந்தும். அவ்வாறில்லையென்பதைப் பைபிலே காட்டுகின்றது. பால் தயிர் திருஷ்டாந்தங் கூறுவதில் பின்னும் ஒரு தோஷம் உண்டாகின்றது. அதாவது பால்கெட்டுத் தயிராவதில் தயிர் தயிராகவேயிராது. தயிர் கெட்டு மற்றொன்றாகி, அதுவுங்கெட்டுப் பிறிதொன்றாகி, அதுவும் கெட்டு இன்னொன்றாகி இவ்வாறு அளவு கடந்துபோம் என்பதாம். இப்படிப் பிதா கெட்டு ஏசுக்கிறிஸ்துவாகி, அவர் கெட்டு மற்றொருவராகி, அவரும் கெட்டு இன்னொருவராகி இவ்வாறு அளவுகடந்து போகவேண்டிவருகின்றது. இப்படிப்பார்க்கும்போது தற்காலத்தில் பிதாவுமில்லை; ஏசுக்கிறிஸ்துவுமில்லை; இப்போது இன்னார் இருக்கின்றாரென்றுந் தெரியவில்லை. யாரோ ஒருவர் இருப்பதாக ஒத்துக்கொள்ளின் பிதா, குமாரன் இவ்விருவரும் இப்போது பரமண்டலத்திலிருக்கின்றாரென்றுரைக்கும் பைபிலுக்கு விரோதமாகின்றது. பைபிலுக்கு விரோதமாக வொத்துக்கொள்ளுகின்றவர்கள் கிறிஸ்தவர்களென்று சொல்லப்படமாட்டார்கள்

பால் முற்றுங்கெட்டுத் தயிராவதுபோலல்ல; பாலில் சிறிதுபாகங்கெட்டுத் தயிராவதாய் வைத்துக்கொண்டு, அப்படியே பிதாவின் சிறிதுபாகங்கெட்டுக் குமாரன் ஆகினார்; இதனால் பிதா முற்றுங் கெடவில்லை என்று கூறுவார்களேல், களங்கரகிதமான கடவுளுக்குக் களங்கத்தைச் சொல்வதோடு, மாறுதலில்லாத பொருளுக்குச் சிறிதுபாகமேனும் மாறு சொல்லவேண்டியதாகின்றது. சிறிதுபாகமொழிய ஏனைய பாகமாவது மாறுபடாதிருக்குமோவெனின் அவ்வாறிருக்க முடியாது. எந்தக் காரணத்தினால் ஒருகால் சிறிது மாறுதலாயிற்றோ, அதே காரணத்தால் மற்றொருகால் பின்னும் சிறிது மாறுதலாகும். இவ்வாறே முற்றும் ஒருகாலத்து மாறிப்போமென்பது நிச்சயம். சீக்கிரத்தில் முற்றும் மாறாவிடினும் அவகாசத்தில் மாறிப்போமென்பது திண்ணம். பால்கெட்டுத் தயிராவதில் மீண்டும் பாலாகாது. அவ்வாறே பிதா கெட்டுக் குமாரனானால் மறுபடியும் பிதா ஆகமாட்டார். இனி வேறுவகையால் சிந்திப்போம்.

மண் கடமாவதுபோல் பிதா குமாரனாகின்றார் எனின், இதில மண் கெடாமல் கடமாகின்றதொன்று; கடம் மீண்டு மண்ணாவதொன்று. இவ்வாறே பிதா கெடாமல் குமாரனாவதொன்று; குமாரன் மீண்டும் பிதாவாவது ஒன்று. மண்ணும் கடமும் போல் இவ்விருவரும் ஒருவரேயென்னில் மண்ணுங் கடமும் வேறு வேறன்று, ஒரே பொருள். பிதாவும் குமாரனும் அங்ஙனமன்று, வேறு வேறு பொருள். மண் ஒரு இடமும் கடம் ஒரு இடமும் இரா. அவ்வாறின்றிப் பிதா பரமண்டலத்தும் குமாரனான ஏசுக்கிறிஸ்து பூமியின்கண்ணும் இருந்ததாகப் பைபில் கூறுவது குற்றமாய் முடியும். மண்ணானது உடைந்து, கழுத்து, [illegible] விகாரங்களைப் பெற்றுக்குடமாகின்றது. அவ்வாறு பிதாவான ஏகோவா, விகாரப்பட்டுக் கிறிஸ்துவானாரென்று சொல்லவேண்டும். மண்ணின் விகாரத்துக்கே குடமென்று பெயர். அங்ஙனமே பிதாவின் விகாரத்துக்கே கிறிஸ்துவென்று பெயராகவேண்டும். நிர்விகாரமான கடவுளுக்கு விகாரத்துவங் கூறுவது கிறிஸ்து சகோதரர்களுக்குச் சம்மதமா? பரமண்டலத்தில் பிதா இருந்தார்; கிறிஸ்து பூமியிலிருந்தார். அப்படியே மண் ஒரு இடமும் குடம் ஒரு இடமுமிருக்குமா? மண்ணும் குடமும்போல் பிதாவையும் கிறிஸ்துவையும் அபின்னமாகச் சொல்வதில் இன்னும் வேறு தோஷங்களிருக்கின்றன. கிறிஸ்து முள்முடி தரிக்கப்பட்டார்; ஏகோவாவுந் தரிக்கப்பட்டாரா? கிறிஸ்து சிலுவையில் அறையுண்டார்; ஏகோவாவும் அறையுண்டாரா? கிறிஸ்து மரித்தார்; ஏகோவாவும் மரித்தாரா? கிறிஸ்து அழுதார்; ஏகோவும் அழுதாரா? கிறிஸ்து பிதாவை நோக்கி என் என்னைக் கைவிட்டீர் என்று கூவினார்; பிதாவும் அப்படிக் கூவினாரா? கூவினார் எனில் பிதா யாரை நோக்கிக் கூவினார்? கிறிஸ்து தேவனும் மனிதனுமாயிருந்தார்; பிதாவும் அப்படியிருந்தாரா? கிறிஸ்து மரித்தெழுந்தார்; பிதாவும் அப்படியா? கிறிஸ்து மரியாள் வயிற்றிற் பிறந்தார்; பிதாவும் அப்படித்தானோ? இவ்வாறு பல ஆக்ஷேபங்களிருக்கின்றன. பிதா குமாரன் இவ்விருவரும் பரமண்டலத்தில் வலதுபக்கத்திலும் இடது பக்கத்திலும் இருந்தார்களென்பதில் வலதுபக்கத்திலுள்ளவர் இடதுபக்கத்திலில்லை; இடதுபக்கத்திலுள்ளவர் வலதுபக்கத்திலில்லை. அப்படி மண்ணும் கடமும் வேறு வேறு ஸ்தானத்திலிருக்கின்றனவா? மண்ணைக் கடமாக்கக் குயவன் வேண்டியிருப்பதுபோல பிதாவைக் குமாரனாக்க ஒருவர் வேண்டுமே; அவர் யார்? கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார்; பிதாவும் பெற்றனரா? [illegible] போன்றனவெல்லாம் கிறிஸ்துவுக்கும் பிதாவுக்கும் ஒரேகாலத்தில ஓரேயிடத்தில் நடந்தனவா? வேறு வேறு காலத்தும் வேறு வேறு இடத்தும் நடந்தனவென்னில் மண்ணுங் கடமும்போல பிதா, குமாரன் இவ்விருவர்க்கும் அபேதஞ்சாதித்தல் கூடாது; பேதமே சாதித்தல் வேண்டுமன்றோ. இவ்வளவு தோஷங்களிருக்கின்றமையால் இவ்வுவமானத்தைத் தள்ளிப், பிம்பப் பிரதிபிம்ப உவமானங் கூறுகின்றோம். சூரியனது பிம்பம் ஜலத்தில் பிரதிபிம்பிக்கின்றதுபோல பிதாவானவர் பிரதிபிம்பித்துக் கிறிஸ்துவானார் என்றாலோ இது மகத்தான தோஷத்தை யுண்டாக்குகின்றது. பிதா ஸ்தானத்துச் சூரியனையுங் கிறிஸ்து ஸ்தானத்துப் பிரதிபிம்ப சூரியனையுமாகின்றார்கள். சூரியன் உண்மைப்பொருள்; பிரதிபிம்ப சூரியன் தோற்றமாத்திரமான வெறும் பொய்ப்பொருள். அவ்வாறே பிதா உண்மைப்பொருள்; கிறிஸ்து பொய்ப்பொருள். இது கிறிஸ்தவர்களுக்கிஷ்டமா? இப்படிச் சொல்லிவிட்டால் கிறிஸ்து பிறந்தாரென்பதும், உபதேசங்கள் செய்தாரென்பதும், அற்புதங்கள் செய்தாரென்பதும், மரித்தாரென்பதும், உயிர்த்தெழுந்தாரென்பதும், சீஷர்களுக்குக் காணப்பட்டாரென்பதும், பரமண்டலம் போனாரென்பதும், பிதாவின் வலதுபக்கத்தில் இருக்கிறாரென்பதும், நியாயந்தீர்க்கவருவாரென்பதும் இதுபோன்ற அவரைப்பற்றிய மற்ற விஷயங்கள் யாவும் பொய்யிலும் பொய், சத்தியமற்ற பொய்யேயல்லவா? வீண் பொய்யாயினவன் சரித்திரமும் பொய்யாவதுபோல், கிறிஸ்து சரித்திரமும் பொய்யாயிருக்குமா? கிறிஸ்து சரித்திரம் பொய்ப்பிக்குங்கால் பைபில மாத்திரம் மெய்யாகுமா? பிம்பப் பிரதிபிம்ப திருஷ்டாந்தம் சொல்வதில் பின்னும் ஒரு தோஷமுண்டாகின்றது. பிம்பப்பிரதிபிம்ப திருஷ்டாந்தம் கண்டப்பொருளில் சொல்லப்படுமேயன்றிப் பரிபூரணப்பொருளிலில்லை. சூரியன் ஆகாயத்திலிருக்கின்றான்; ஜலம் கீழிருக்கிறது. ஆகையினால் சூரியன் பிரதிபிம்பிக்கிறான். சூரியன் எங்கும் பரிபூரணனாயிருப்பானேயாகில் ஜலமான மற்றொரு பொருளிருக்க இடமில்லை; ஜலமில்லாதபோது பிரதிபிம்பமும் உண்டாகமாட்டாது. கிறிஸ்தவர் கடவுளைப் பரிபூரணராகக் கூறுகின்றார்கள், ஆதலால் கடவுளுடைய பிரதிபிம்பம் ஏசுக்கிறிஸ்து என்றுரைப்பது தகுதியன்று.

இனி வேறொரு திருஷ்டாந்தம் கூறுவோம். அஃதாவது; கயிற்றிற் பாம்பும் கானல்நீரும் போலவாம். இதற்கு உவமேயம்: கயிறு ஸ்தானத்தில் பிதாவும், குமாரன் ஸ்தானத்தில் பாம்பும் எனின் இதுவும் மகத்தான தோஷமாம். பாம்பும் நீரும் எப்படிப் பொய்யோ, எப்படித் தோற்றமாத்திரமோ, எப்படிக் கயிற்றையன்றிப் பொருளில்லையோ அப்படியே கிறிஸ்துவானவர் பொய்யும், தோற்றமாத்திரமும், பிதாவையன்றிப் பொருளில்லாதவருமாகின்றார். கயிற்றினிடத்து மயக்கத்தால் காணப்படும் பாம்பு ஒரு வயிற்றிற் பிறக்குமா? கடிக்குமா? ஏதாவது காரியஞ்செய்யுமா? செய்யாதல்லவா? அவ்வாறே கிறிஸ்து என்பவர் பிறந்தாரென்பதும், இராஜநீதி [illegible] தெய்வத்துரோகஞ்செய்தாரென்பதும், அதற்காகச் சிலுவையில் அறையுண்டு கொல்லப்பட்டு மூன்றுநாள் எழுந்து பரலோகஞ் சென்றாரென்பதும், மற்றும் அநேக காரியங்களை இயற்றினாரென்பதும் பொய்யாகவில்லையா?

கயிற்றின் மயக்கத்தால் தோன்றும் பாம்பைப்போல் ஏசுக்கிறிஸ்துவைச் சொல்வோமாயின் அவரொருவர் சத்தியமாக இருந்தாரென்பதை யாரேனும் நம்புவார்களா? இவ்வாறு [illegible]மையுள்ள அவரைப்பற்றிய மதம் ஒன்றிருக்கவேண்டுமா? அம்மதத்தைப் புத்திமான்கள் அநுசரிப்பார்களா? அதை அநுசரித்துக் கற்றவர் சபையில் வந்து பிரசங்கிப்பார்களா? பாமரர் சபையிலாவது வந்து பிரசங்கிப்பார்களா? அதை ஒரு சித்தாந்தமாகக்கொண்டு பத்திரிகை, புத்தகமெழுதி வெளிப்படுத்துவதும் தருமமா? அது காரணமாக வேதனம் பெறுவதும், [illegible] கொண்டு [illegible] நன்றாமா? அந்த [illegible] நடத்துவதும் விவேகமா? நியாயமில்லாமைகொண்டு தாம் [illegible] பாமரரிருந்து வயிறுப் பிழைப்பினிமித்தம் நம்புவதுபோல பிரசங்கித்துக்காட்டிப் பிறரை நம்பப்பண்ணுவது அழகா? அ[illegible]

படிப்பட்ட நியாயமில்லா அசத்திய மதத்தில் தாய் தந்தை முதலானோர் மனங்கொதிக்க அவர் மக்களைச் சேர்ப்பது உத்தமர்க்குடன்பாடா? நடுநிலையாய் நின்று மதங்களைப் பரிசோதிக்கும் அறிஞர்களே! இதை ஆழ்ந்தாலோசித்துப் பாருங்கள். நிற்க;

"சூரியகிரணமாகிய ஒன்றிலே வெவ்வேறு பதார்த்தங்களாகிய ஒளியும் உஷ்ணமும் வர்ணமும் ஒன்றுகூடி ஓர் கிரணமாய்த் தோன்றுவதுபோல, ஞானசூரியனாகிய பரமாத்மாவிலே பிரத்தியேக புருஷராகிய பிதா, குமாரன், ஆவி என்னு மூவரும் ஒன்றுகூடி ஒரு கடவுளாய் ஓர் கிரணமாய்த் தோன்றுவதுபோல, ஞானசூரியனாகிய பரமாத்மாவிலே பிரத்தியேக புருஷராகிய பிதா, குமாரன், ஆவி என்னும் மூவரும் ஒன்றுகூடி ஒரு கடவுளாய் விளங்குகின்றனர். இம்மூவரில் குமாரனானவர் உலகத்தை ஈடேற்றும்பொருட்டு மானிடவடிவெடுத்துத் தோன்றினர் என்று கிறிஸ்துமதம் உபதேசிக்கின்றது" என ஒருவர் கூறுகின்றனர். அவர் தத்துவ வாசனையேயில்லாத கிறிஸ்தவர்கள் மெய்ச்சும்படி சொல் ஜாலங்காட்டுகின்றாரேயன்றி அவர் கூற்றில் நியாயமென்பது அணுத்துணையுங் காணோம். உவமானம் வடக்குநோக்கினால் உவமேயம் தெற்குப்போகின்றது. எந்த விஷயத்திற்கு எந்த உவமானஞ் சொல்லப் புறப்படுகின்றோமோ, அந்த விஷயத்திற்கு அந்தவுவமானத்தைப் பொருத்திக்காண்பிக்கவேண்டியது கடமையாம். 'சூரியகிரணமாகிய ஒன்றிலே வெவ்வேறு பதார்த்தங்களாகிய ஒளியும், உஷ்ணமும், வர்ணமும் ஒன்றுகூடி ஓர் கிரணமாய்த் தோன்றுவதுபோல" என்பதில் ஒளியும், உஷ்ணமும், வர்ணமும் வெவ்வேறு பதார்த்தங்கள் என்பன எங்ஙனமாகும்? சூரியனிடத்து ஒளி, உஷ்ணம், வர்ணம் இம்மூன்றும் தற்கிழமையா? பிறிதின்கிழமையா? பொருள், இடம், காலங்கள் மூன்றும் பிறிதின்கிழமை; சினை, குணம் தொழில்கள் தற்கிழமை. ஷை மூன்றும் குணமாயிருக்கின்றமையால் தற்கிழமை வகுப்பில் நோக்கத்தகுமெனக. குணங்களை வெவ்வேறு பதார்த்தங்களென்று எங்ஙனமாக்கத் துணிந்தார்? சூரியனில் ஷை மூன்றும் வேறு வேறெனப் பின்னமாக்கப்படாது; அபின்னமேயாம். ஆதலால் இவ்வுவமானம் பொருத்தமுடையதாகாது. இவ்வுவமானப்படி உவமேயத்தைப் பார்ப்போமானால் அவர் கூறும் பரமாத்மாவிற்குப் பிதா, குமாரன், ஆவி இம்மூன்றும் அபேதமாவனவோடு, பரமாத்துமா குணியும்; பிதா, குமாரன், ஆவி இம்மூவரும் குணங்களுமாகின்றார்கள். இவ்வாறுபின் குணங்களையன்றிக் குணிக்குப் பொருள் கிடையாது. ஒளி, உஷ்ணம், வர்ணமுதலிய குணங்களையன்றிச் சூரியன் எனனும் சொல்லுக்குப் பொருளில்லை; இது உவமானம். இவ்வாறே பிதா, குமாரன், ஆவி, இம்மூன்றைத் தவிரப் பரமாத்துமாவிற்குப் பொருளில்லாமற்போகின்றது. அதுநிற்க, சூரியனான குணியைவிட்டுக் குணங்களான ஒளி, உஷ்ணம், வர்ணம் இம்மூன்றும் எப்படி வேறுபடாவோ, அப்படியே பரமாத்துமாவை விட்டுப் பிதா, குமாரன், ஆவி இம்மூவரும் வேறுபடார்கள். "பரமாத்துமாவிலே பிரத்தியேக புருஷராகிய பிதா, குமாரன், ஆவி" என்று அவர் பேசுகின்றார். பரமாத்துமாவாகிய பொருளிலே ஷை மூன்றும் பிரத்தியேகமென்று கூறி மறுபடியும் பரமாத்துமாவும் பிதா, குமாரன், ஆவியும் ஒன்றென்பது நேர்மாறாகவிருக்கின்றது. இவ்வாறு பைபிலாவது பேசுகின்றதா? வாயிலவந்தபடி சொல்லிவிட்டுக் கிறிஸ்துமதமென்று கௌரவமாய்ச் சொல்லிக்கொள்வது பரிகாசத்துக்கிடமாமெனக. ஒரு கூண்டிலுள்ள கிளி பிரத்தியேகமென்று கூறி, அதற்கு மாறாகக் கூண்டும் கிளியும் ஒன்றென்னலாமா? சூரியனும் அதன் குணமான ஒளிமுதலியனவும் ஒன்றெனக்கூறி, மீண்டும் பிரத்தியேகமென்கலாமா? எப்படிப்போனாலும் மிமக்கின்றதே. இவ்வாறான ஆபாச திருட்டாந்தத்தைக் கூறுவோரும் ஆபாசரேயாமெனக.

மதவிசாரணைபுரிவோன்.

நமது ப்ரம்மவித்தியாவின் கையொப்ப நேயர்களுக்கு.

ஐயா,—நம் ப்ரம்மவித்தியா பத்திரிகைக்குச் சேரவேண்டிய சந்தாத்தொகையை வசூல் செய்யும்பொருட்டு அ. சாமிநாதபிள்ளை என்பவரைப் பிலக்லெக்டராய் நியமித்திருக்கின்றோம். ஆகையால் ஷை பத்திரிகைக்காகப் பாக்கியுள்ளவற்றையும், டிப்பய்தீக்ஷிதர் அவர்கள் கிரந்தத்திற்குச் சேரவேண்டிய பாக்கிகளையும் அவரிடம் கொடுத்து அவரால் கையொப்பமிட்ட ரசீது பெற்றுக்கொள்ள யாதும் தடையில்லை. நண்பர்களே! இனியும் பாக்கியை வைத்துக்கொள்ளாது தம்மால் சேரவேண்டியவற்றைக் கொடுத்துவிடுவீர்களாக.

கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்,

ப்ரம்மவித்தியா பத்திராதிபர்.

பஞ்சாங்கங்களின் குளறுபடைகள்.

ஐயா,—யான் வரையும் சில விஷயங்களைத் தமது மேன்மை தாங்கிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்குமாறு தங்களது மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

இம்மதி சென்ற 16உ வெள்ளிக்கிழமையன்று நேர்ந்த சூரியகிரகணத்தின் தடுமாற்றத்தை அறியாதார் ஒருவருமிலர். இதற்கு முக்கிய காரணம் கிரகணத்தைப்பற்றிக் கணிக்கப்பட்ட காலம் ஒருவர் எழுதியபடி மற்றொருவர் எழுதாது தங்களுக்குத் தோன்றியபடி ஒன்றுக்கொன்று முரணும்படி கணிக்கப்பட்டதென்பதே.

யான் பார்த்த பஞ்சாங்கங்களின் நாழிகை வித்தியாசங்கள் பின்வருமாறு காண்க:—

ஒரு பஞ்சாங்கத்தில் ஸ்பரிசகாலம் பகல் நாழிகை உக. விநாடி ௩௧. பிறிதொரு பஞ்சாங்கத்தில் பகல் நாழிகை உ௪. விநாடி ௩௯. இன்னுமொரு பஞ்சாங்கத்தில் பகல் நாழிகை ௨௧. விநாடி உ௫. வேறொரு பஞ்சாங்கத்தில் பகல் நாழிகை உஉ. விநாடி ௩௪. ஆனால் கடையில் குறிக்கப்பட்ட காலத்தின்படி சரியாகக் கிரகணம் நிறைவேறியது. மற்றைய காலங்களெல்லாம் கோலமாயின. திதி, வாரம், நக்ஷத்திரங்கள் முதலானவைகளால் பஞ்சாங்கங்களின் உண்மையையறிவது சாத்தியமல்ல. ஆனால் பிரத்தியக்ஷமாகத் தெரியக்கூடிய கிரகணத்தின் காலம் எப்பஞ்சாங்கத்தில் கிரமமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதோ, அப்பஞ்சாங்கமே ஏனைய விஷயங்களெல்லாவற்றிலும் சரியாகவிருக்குமெனக் கருதி அதையே அநுட்டிப்பது நன்று. ஒருவர் தன் பஞ்சாங்கம் சிராத்தாதிகளுக்குச் சரியாகவிருக்குமென்பதையும் இன்னொருவர் தம் பஞ்சாங்கம் திதி வார நக்ஷத்திரங்களுக்குச் சரியாகவிருக்குமென்பதையும், வேறொருவர் தமது பலன்களுக்காகச் சரியாகவிருக்குமென்பதையுமுடைய பஞ்சாங்கங்களை அநுட்டிப்பது அவ்வளவு உசிதமல்லவென எனதபிப்பிராயம்.

உண்மையுரைப்போன்.

ஸம்ஸ்க்ருதம்.

[illegible]

(ரசீது) [illegible]

[illegible]

சிதம்பரம் ஆனித்திருமஞ்சன மஹோற்சவம்.

இவ்வூரில் ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்திக்கு உற்சவம் ஆனிமாதம் 14உ முதல் தொடக்கப்பட்டு வெகு சிறப்பாய் நடந்தேறிவருகிறது. 18-உயாகிய ஞாயிற்றுக்கிழமையன்று விருஷபவாகன காக்ஷி வருணபகவானது இடையூறின்றி வெகு ப்ரம்மானந்தமாய் நடந்தேறியது. இனிப்பிக்ஷாடனம், ரதோற்சவம், தரிசனமுதலியவைகளும் வெகு சிறப்பாகவே நடந்துவருமென்பதற்குச் சந்தேகமில்லை.

சூதசம்மிதாப்பிரகடனம்.

ஸ்காந்த மஹாபுராணத்துள்ள ஆறு சம்மிதைகளுள் ஒன்றாய் யாவற்றினும் சிறந்ததாய்ச் சுத்தாத்வைதசித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை பகட்டுவதாயுள்ளது. இச்சூதசம்மிதையென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்த விஷயமாம். நம் சைவசமயத்துள் எவ்விஷயங்களை அறிய விரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் பெரிதெடுத்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகள் மேன்மைதாங்கிய பாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன் பெருமை எளிதில பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு விரித்தோருரை ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

இது சைவசமயாபிமானிகளாகிய நம் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந் தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டு வழங்கும் கிரந்த எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டுப் புத்தகம் 1-ரூபா 5-க்கு விற்கப்பட்டுவருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நம் தென்னாட்டிற் பயன்தாராததலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனைக் கிரந்த எழுத்தில அச்சிட்டு யாவர்க்கும் உபயோகமாகும்பொருட்டு மிகச் சொற்பவிலையாகிய 2-ரூபாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கின்றோம்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து இதுமுதல் மூன்று மாசத்துக்குள் இதன் கிரயமாகிய ரூபா இரண்டையும் முன்பணமாக அனுப்பதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்புவோர்க்கு மாசம் 1-க்கு 8-பாரம் கொண்ட சஞ்சிகையாக 16-மாசவரையில வது அல்லது 16-மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டு செய்து ஓர் நடவையில் புத்தகமாக்கியாவது அனுப்பப்படும். 10-க்கு 1-ம், 25-க்கு 3-ம், 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம் இனாமாகக்கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசீது பெற்றுக்கொளவதோடு, தமக்கு மாசந்தோறும் சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்த புத்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தம் கருத்தைக் கடிதமூலமாகத் தெரிவித்தலும்வேண்டும். ஆவணி-மீ 30உக்குள் அனுப்பப்படும் கையொப்பங்களேயன்றி அதன்மேல் வரும் கையொப்பங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

விரோதிஸு
வையாசிமீ
29உ

இங்ஙனம்,
கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர், சிதம்பரம்.

குறிப்பு.

நமது கையொப்ப நண்பர்களே!

நம் ப்ரம்மவித்தை என்னும் நங்கைக்கு மூன்றாவதாண்டு பரிபூரணமானமையாலும் இனிப் புதிய வருடமாகிய நான்காவது ஆண்டில் சிற்சில ஏற்பாடுகள் செய்யவேண்டியபடியாலும், இம்முறை இரண்டு பாரங்களுடன்வெளிப்படுத்தினோம். இஃது சென்றமுறை வெளியான 24-வது நெம்பர் இலக்கமுள்ள பத்திரிகைக்கு அனுபந்தமெனக்கொள்க. இனி அடுத்தமாதமுதற்கொண்டு பத்திரிகை முன்போலக் கிரமமாக அனுப்பப்படும்.

பத்திராதிபர்.

[illegible]

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press.

ப்ரஹ்மவித்யா.

பத்திராக்கிரயம்
1வருஷ 2—12—0
6மா 1—8—0
3மா 0—14—0
1காபி- 0—2—6
இலங்கைக்கு
3—8—0

ப்ரம்மவித்தியா பத்திரிகை

BRAHMAVIDYAPATHRIKA.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

பத்திராக்கிரயத்தை முன்னியார்டராக வரவனுப்புவோர் ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

௪-மபுத்தகம்] சிதம்பரம்:— ௧௮௮௬ஞ் ஜூலை மீ ௰௫உ [இலக்கம்- ௧

[illegible]

ஆரியாசாரம்.

முன் தொடர்பு.

சந்தியாவந்தன விதி.

ஹோமம், தானம், பிரதிக்கிரகித்தல், போஜனம், ஆசமனீயம், ஜபம் இவைகள் செய்யுங்கால் கைகளிரண்டும் முழங்கால்களுக்குள்ளிருத்தல்வேண்டும். இனிக் கடவுளை வணங்கும் பொழுதும், வலம்வரும்பொழுதும், வழிபடும்பொழுதும், வேள்விகளிலும், ஆசிரியனைக் கண்டவிடத்தும், ஆன்றோர் சந்நிதியிலும் கழுத்தில் வஸ்திரத்தைச் சுற்றியிருத்தல் கூடாது. ஆசாரியன், மெய்யன்பர்கள், திவ்வியாலயங்கள், தண்ணீர், அரசமரம், அக்கினி, சூரியன் இவைகளைப் பின்புறத்தில் நிறுத்தி ஜபஞ்செய்தல்கூடாது. "கொப்புளுக்குக்கீழான அங்கங்களைத் தீண்டில் தனது கைகளைத் தண்ணீரால் சுத்தி செய்யவேண்டும்; அல்லது வலது செவியைத்தொட்டுக் கடவுளை ஒருவாறு தியானித்தல் வேண்டும்" என்று எமன் கூறுகின்றார். தலையிற் பாகை தரித்தும், நிர்வாணியும், தலைமயிர் அவிழ்த்தும், உள்ளங்கலங்கியும், கோடங்கொண்டும், ஊனுணவை மேலிட்டும், படுத்தும், நடந்தும், பாய்களிலுட்கார்ந்தும், பாதுகை தரித்தும், வாகனமேறியும், கால்களை நீட்டியும், உயர்ந்தாசனத்தில் வீற்றிருந்தும், இருளடர்ந்தவிடமிருந்தும், விசாலமானவிடத்திலுட்கார்ந்தும், தெருவில் நின்றும் ஜபஞ்செயதல் கூடாது. கைமூடாதும், தலையை மூடியுஞ்செபித்தல் குற்றத்திற்கிடமாம். ஜபகாலத்தில் நகைத்தல் கூடாது. பக்கங்களிற் பார்க்கலாகாது. காலையில் தனது நாசிக்கு எதிரிலும், பகலில் தோள்களுக்கு எதிரிலும், மாலையில் கொப்புளுக்கு எதிரிலும் கைகளை வைத்து ஜபித்தல்வேண்டும். ஜபகாலத்தில் மந்திரங்களின் பொருளை நினைத்துவர